10.06.15

**கம்பம் பகுதியில் முதல்போக நெல் நடவுப்பணி தொடக்கம்**

கம்பம் பகுதியில் முதல்போக சாகுபடிக்கான நெல் நடவுப்பணி திங்கள்கிழமை தொடங்கியது. நெல் பாசனத்திற்கு போதிய தண்ணீர் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கிலுள்ள லோயர்கேம்ப் முதல் பழனிசெட்டிப்பட்டி வரை சுமார் 14 ஆயிரத்து 707 ஏக்கரில் இருபோக நெல் நடவுப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் முல்லைப் பெரியாறில் இருந்து ஜூன் 2 ஆம் தேதி முதல்போக பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதனால் கடந்த சில தினங்களாக நாற்றங்கால் அமைத்து வந்த விவசாயிகள் தற்போது முதல்போக நெல் நடவுப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறியது: கடந்த ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டு போதிய மழை பெய்ததால் முல்லைப் பெரியாறு அணையில் முதல்போக நெல் பயிர்களுக்கு தேவையான தண்ணீர் இருப்பு உள்ளது. எனவே, முதல்போக நெல் நடவுப் பணிகளில் ஈடுபட்டுள்ளோம். அடுத்து தென்மேற்கு பருவமழை கேரளாவில் தொடங்கியிருப்பதால் நல்ல மழை இருக்கும் என்ற நம்பிக்கை உள்ளது, என்றனர்.

**தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழை பெய்யும்**

வெப்பச் சலனம் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது: வெப்பச் சலனம் காரணமாக, தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் புதன்கிழமையும் தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழை பெய்யும்.

கடந்த 24 மணி நேரத்தில், நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் 50 மி.மீ, கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக் கோட்டையில் 30 மி.மீ, மதுரை தெற்கு, புதுக்கோட்டை, தளி, பரமத்தி வேலூர், தம்மம்பட்டி ஆகிய இடங்களில் 20 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச, குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 99, 82 டிகிரி ஃபாரன்ஹீட்டாக இருக்கும். வெயில்.. தமிழகத்தில் செவ்வாய்க்கிழமையன்று வேலூர், பாளையங்கோட்டை ஆகிய 2 நகரங்களில் 101 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில் பதிவானது. அதற்கு அடுத்தபடியாக, நாகையில் 100-ம், மதுரையில் 99-ம், சென்னை, கரூர் பரமத்தி, பரங்கிப்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் 98 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு வெப்பம் பதிவானது என்றார் அவர்.

**பருப்பு விலை உயர்வைக் கட்டுப்படுத்த காங்கிரஸ் கட்சியினர் கோரிக்கை**

துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு விலை உயர்வைக் கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என காங்கிரஸ் கட்சியினர் கோரிக்கை விடுத்துள்ளனர். ராசிபுரம் அருகே வெண்ணந்தூர்

நகர காங்கிரஸ் செயல்வீரர்கள் கூட்டம், நகரத் தலைவர் சிங்காரம் தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்றது. செயலர் வெங்கடாஜலம் வரவேற்றார். துணைத் தலைவர்கள் காசிபெருமாள், முனியப்பன், தங்கமுத்து முன்னிலை வகித்தனர். நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: கடந்த இரண்டு மாதங்களில் மக்கள் பயன்படுத்தும் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு உள்ளிட்ட அனைத்து பருப்பு வகைகளும் வரலாறு காணாத அளவில் விலை உயர்ந்துள்ளது. ஏழை, எளிய மக்கள் நலன் கருதி பருப்பு விலையைக் குறைக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசு அறிவித்துள்ள சரக்கு மற்றும் சேவை வரி சட்டத்தினால், சிறு வியாபாரிகள் உள்ளிட்ட பலரும் பாதிக்கப்படுவதோடு, உணவு பொருள்களின் விலை உயரவும் வாய்ப்புள்ளது. மளிகைக் கடை நடத்தும் சிறு வியாபாரிகளின் நலனைக் கருத்தில் கொண்டு இச் சட்டத்தை மத்திய அரசு கைவிட வேண்டும்.

ஆவின் பால் நிறுவனம் பால் உற்பத்தியாளர்களை புறக்கணித்து, தனியார் பால் விற்பனையாளர்களிடம் பால் கொள்முதல் செய்து வருவதால், பால் உற்பத்தியாளர்கள் பெரும் பாதிப்பு அடைந்துள்ளனர். பால் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட, அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். வருங்கால இளைய தலைமுறையினரின் வாழ்க்கை நிலையைக் கருத்தில் கொண்டும், ஏழை, எளிய கூலித் தொழிலாளர்களின் குடும்ப நலன் கருதியும் தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமல் படுத்த வேண்டும். இதில், நிர்வாகிகள் சுப்பிரமணியம், கந்தசாமி, மோகன், நடராஜன், கோபிநாத், தங்கவேல் உள்பட பலர் பங்கேற்றனர்.

**தென்னை விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம்**

பல்லடம் அருகே செஞ்சேரியில் தென்னை விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. சுல்தான்பேட்டை ஒன்றியம், செஞ்சேரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நடைபெற்ற

இக்கூட்டத்துக்கு, நீர்வள, நிலவள திட்ட பாசன சபைத் தலைவர் எஸ்.ஆர்.ராஜகோபால் தலைமை வகித்தார். குமாரபாளையம் ஊராட்சித் தலைவர் முத்துமாணிக்கம் முன்னிலை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் கிருஷ்ணவேணி வரவேற்றார். கூட்டத்தில், தரமான தென்னை நாற்று தேர்வு செய்வது முதல் விற்பனை செய்வது வரை ஆலோசிக்கப்பட்டது. பொள்ளாச்சி திப்பம்பட்டியில் இளநீர் வணிக வளாகத்தில் தென்னை விவசாயிகள் இளநீர் விற்பனை செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. இதில், வேளாண்மை துறை அலுவலர்கள் பாமினி, ரமேஷ், பூபாலன் மற்றும் தென்னை விவசாயிகள் பங்கேற்றனர்.

**நாட்டுக்கோழிப் பண்ணை அமைக்க 50 சத மானியத்துடன் கடனுதவி**

புதுக்கோட்டை மாவட்டத்தில் நாட்டுக்கோழிப் பண்ணை அமைக்க ஆர்வமுள்ளவர்களுக்கு மாநில, நபார்டு வங்கி மூலம் 50 சத மானியத்துடன் கடனுதவி வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் சு. கணேஷ் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழக அரசின் கால்நடைப் பராமரிப்புத் துறையால் செயல்படுத்தப்படும் நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டத்தின் மூலம் கோழிப்பண்ணை தமிழக முதல்வரின் கோழியின மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டில் மாவட்டத்தில் 160 பயனாளிகளுக்கு தலா ரூ. 1,29,500 - லட்சம் மதிப்பில் கடனுதவி வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் தமிழக அரசு மானியமாக 25 சதமும், மத்திய அரசு மானியமாக நபார்டு வங்கி மூலம் 25 சதமும் வழங்கப்படவுள்ளது. திட்ட செயல் வரைவின்படி ஓராண்டுக்கு 3 சுற்றுகளாக தலா 250 குஞ்சுகள் வீதம் 750 குஞ்சுகள் வழங்கப்படவுள்ளன. பயனாளிகளுக்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மூலமாக 3 நாட்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும். இத்திட்டத்தில் பயனடைய விருப்பமுள்ள விவசாயிகள், தொழில் முனைவோர், சுய உதவி குழுவினர்

தங்கள் பகுதியில் உள்ள கால்நடைப் பராமரிப்புத் துறை அலுவலகங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மூலமாக விண்ணப்பிக்கலாம். மேலும் வங்கிக் கடன் பெறாமல் சொந்த முதலீட்டில் பண்ணை அமைப்பவர்களுக்கு மேற்குறிப்பிட்ட 25 சத மானியம் தமிழக அரசால் வழங்கப்படும். எனவே இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் இம்மாதம் 30. 6.2015 வரை விண்ணப்பங்களை தங்கள் பகுதி சேவை வங்கி விவரத்துடன் அந்தந்த பகுதி கால்நடை மருந்தகத்தில் அளிக்கலாம்.

**குமரி மாவட்டத்தில் வேளாண்மைப் பணிகள்: ஆட்சியர் ஆய்வு**

கன்னியாகுமரி மாவட்ட தோட்டக்கலைத் துறை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில் அமைக்கப்பட்டு வரும் வேளாண் பணிகளை மாவட்ட ஆட்சியர் செவ்வாய்க்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இம்மாவட்டத்தின் காரோடு பகுதியில் வேளாண்மைப் பொறியியல் துறையால் அமைக்கப்பட்டுள்ள 12 தடுப்பணைகளையும், அதே பகுதியில் 1.8 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டிருந்த பசுமை இல்லத்தையும் ஆட்சியர் பார்வையிட்டார். அப்போது, பொதுமக்களிடம் ரேஷன் பொருள்கள் குறைவின்றி கிடைக்கிறதா எனக் கேட்டறிந்தார்.

பின்னர், புலியூர்சாலையில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் 946 ச.மீ. பரப்பில் ரூ. 4.42 லட்சம் மானியத்தில் அமைக்கப்பட்டிருந்த பசுமைக் குடிலை ஆய்வு செய்தார். மேலும், போராங்கோடு கிராமத்தில் ஜாதிக்காய் பரப்பு விரிவாக்கம், நல்லமிளகு பரப்பு விரிவாக்கம், கோகோ பரப்பு விரிவாக்கம் ஆகிய திடல்களில் ஆய்வு மேற்கொண்டார்.

அதைத்தொடர்ந்து காஞ்சாம்புறம் கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த திப்பிலி பரப்பு விரிவாக்கம் மற்றும் கோகோ பரப்பு விரிவாக்கம் ஆகியப் பணிகளையும் ஆட்சியர் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் நிஜாமுதீன் (விவசாயம்), வேளாண்

பொறியியல் துறை செயற்பொறியாளர் ஆனந்தராஜா (பொ), தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் சுரேஷ்ஜோஸ், ஷீலாஜாண், வேளாண்மைப் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் நடராஜன், உதவிப்பொறியாளர்கள் ராதாகிருஷ்ணன், அமல்ராஜ், சொர்ணலதா, உதவி வேளாண்மை அலுவலர் சிங் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**ரூ. 13 லட்சம் மேகி நூடுல்ஸ் பாக்கெட்டுகள் வாபஸ்**

நாகர்கோவில் பகுதியிலுள்ள கடைகளில் மேகி நூடுல்ஸ் பாக்கெட்டுகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை தெரிவித்தனர். அப்பகுதி கடைகளில் மாவட்ட உணவு பாதுகாப்புத் துறை அதிகாரி சாலோடிசன் தலைமையில் அதிகாரிகள் குமார பாண்டியன், சங்கர நாராயணன், பிரவின் ரகு ஆகியோர் சோதனை நடத்தினர். கோட்டாறு, செட்டிக்குளம் ஆட்சியர் அலுவலக சந்திப்பு, டதி ஸ்கூல் ரோடு, வடசேரி, பார்வதிபுரம் உள்ளிட்ட நகரின் முக்கியப் பகுதிகளில் இந்த சோதனை நடைபெற்றது.

அப்போது நூடுல்ஸ் பாக்கெட்டுகள் மட்டுமன்றி பிற உணவுப் பொருள்களையும் அதிகாரிகள் கைப்பற்றி சோதனை செய்தனர். அதில் அச்சிடப்பட்டுள்ள விவரங்கள், அளவுகள் குறித்து அவர்கள் ஆய்வு செய்தனர். மேலும், கடைகளின் குடோனுக்கு சென்ற அதிகாரிகள் அங்கு காலாவதி பொருள்கள் உள்ளனவா என்பது குறித்தும் ஆய்வு மேற்கொண்டனர். பின்னர் அதிகாரிகள் கூறுகையில், ""மாவட்டத்தில் இதுவரை ரூ. 13 லட்சம் மதிப்பிலான நூடுல்ஸ் பாக்கெட்டுகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன'' என்றனர்.

**முள்ளங்கனாவிளையில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பேரணி**

முள்ளங்கனாவிளையில் செவ்வாய்க்கிழமை சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது. முள்ளங்கனாவிளை ஒய்.எம்.சி.ஏ, புனித அந்தோணியார் உயர் நிலைப்பள்ளியின் தேசிய பசுமைப்படை

ஆகியவை இணைந்து நடத்திய இப்பேரணிக்கு அப்பள்ளியின் அருள்சகோதரி அன்னமேரி தலைமை வகித்தார். தேசிய பசுமைப்படை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜோ பிரகாஷ் முன்னிலை வகித்தார். கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் ததேயூ பிரேம்குமார் பேரணியை கொடியசைத்து தொடங்கிவைத்தார். பேரணி, பள்ளி வளாகத்தில் தொடங்கி சன்னவிளை, கிழக்கேவிளை, பண்டாரவிளை முள்ளங்கனாவிளை குருசடிசந்திப்பு வழியாக மீண்டும் பள்ளியை வந்தடைந்தது.

பேரணியில் பங்கேற்ற மாணவர்கள் "புவியைக் காப்போம்; பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தவிர்ப்போம்; மழை நீர் உயிர் நீர்; பூ உலகை காப்போம்' என்பன உள்ளிட்ட விழிப்புணர்வு கோஷங்களை எழுப்பினர்.

இதில் முள்ளங்கனாவிளை ஒய்.எம்.சி.ஏ இயக்குநர் துரைராஜ், ஆசிரியர்கள் மைதீன், ஹெலன், சாந்தாள், கேத்தரின், டெய்சி, சார்லஸ் மற்றும் ஒ.எம்.சி.ஏ. அலுவலகப் பணியாளர் கனகம் மாணவர்கள் உள்பட பலர் பங்கேற்றனர். தொடர்ந்து அவர்கள் அப்பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**காய்கறிகளில் ரசாயன நச்சுத்தன்மை பரிசோதனைக்கு மாதிரிகள் சேகரிப்பு:கேரள சந்தேகத்தை தீர்க்க முடிவு**

தேனி:தமிழகத்தில் ரசாயனம் உர பயன்பாட்டில் காய்கறிகள் விளைவிக்கப்படுவதாகவும், உற்பத்தி முறையில் மாற்றம் செய்யாவிட்டால் இருமாநில மக்களை பாதிக்கும் என கேரள அரசு,

தமிழக வேளாண் ஆணையருக்கு கடிதம் எழுதி எச்சரித்தது. இதனால் தமிழக காய்கறிகள் கேரளம் கொண்டு செல்வதில் வியாபாரிகளிடம் தயக்கம் ஏற்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் 18,346 எக்டேரில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியாகிறது. இதில் 7200 எக்டேரில் தக்காளி, கத்தரி, வெண்டை, பாகற்காய், புடலை, அவரை, பீன்ஸ், பீட்ரூட், முருங்கை போன்ற காய்கறிகள் சாகுபடியாகின்றன.தேனி மாவட்ட சந்தைகளில் இருந்து தினமும் 150 முதல் 200 டன் காய்கறிகள் கேரளாவிற்கு அனுப்பப்படுகிறது. கேரளாவின் காய்கறி பயன்பாட்டிற்கு தேனி மாவட்டத்தின் பங்கு அதிகம். தேனி மாவட்டத்தில் காய்கறி சாகுபடி செய்யும் சிறு விவசாயிகள் பலரும் கால்நடை வளர்ப்பதால் அதன் கழிவுகளை இயற்கை உரமாக நிலத்தில் பயன்படுத்துகின்றனர்.இச் சூழலில் கேரளாவின் சந்தேகத்தை போக்கும் வகையில் தேனி மாவட்ட தோட்டக்கலை துறை அதிகாரிகள் இங்கு விளையும் காய்கறி மாதிரிகளை சேகரித்து கோயம்புத்துார் வேளாண் பல்கலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். இதில் பயன்படுத்த முடியாத அளவிற்கு நச்சுச்தன்மை உள்ளதா என தெரிந்து கொள்வதற்கு மாதிரிகள் அனுப்பி உள்ளனர். இதன் முடிவுகள் விரைவில் தெரியவரும்.அதே நேரத்தில் காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகளிடம் 'நஞ்சு இல்லா காய்கறி சாகுபடி' என்ற தலைப்பில் கிராமங்கள் தோறும் விழிப்புணர்வு கூட்டம் நடத்த உள்ளனர்.இதில் உழவியல் ரீதியான கட்டுப்பாடு, உயிரியல் ரீதியான பயன்பாடு முறைகளை விளக்குதல், பயிர் அறுவடைக்கு முன் 10 முதல் 15 நாட்களுக்கு பூச்சி மருந்து தெளிப்பதை நிறுத்தவேண்டும், என வலியுறுத்துகின்றனர்.

**வாணிப கழக கிடங்குகளின்இருப்பு விவரம் தர உத்தரவு**

வாணிபக் கழக சேமிப்புக் கிடங்குகளில் உள்ள, உணவுப் பொருட்கள் இருப்பு குறித்து தகவலளிக்க, அதிகாரிகள் உத்தரவிட்டு உள்ளனர். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், அரிசி, பருப்பு உள்ளிட்ட

பொருட்களை கொள்முதல் செய்து, ரேஷன் கடைகளுக்கு நகர்வு செய்கிறது.

வாணிபக் கழக பயன்பாட்டிற்கு, 12.07 லட்சம் டன் கொள்ளளவு கொண்ட, 340 கிடங்குகள் உள்ளன; இதில், 7.50 லட்சம் டன் கொள்ளவு கொண்ட, 217 கிடங்குகள், வாணிபக் கழகத்திற்கு சொந்தமானவை. மற்றவை, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்; இந்திய உணவுக் கழகம்; தனியாரிடம் வாடகை அடிப்படையில் பயன்படுத்தப்படுகின்றன.

ரேஷன் கடைகளுக்கு முழு அளவில் உணவுப் பொருட்களை வழங்க, அரசு உத்தரவிட்டு உள்ளது. ஆனால், சேமிப்புக் கிடங்குளில், உணவுப் பொருட்கள் இருப்பு மிகவும் குறைவாக உள்ளதாக, வாணிபக் கழக அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

இதனால், அந்த விவரத்தை அளிக்குமாறு, சென்னை, தலைமை செயலகத்தில் உள்ள உயரதிகாரிகள், வாணிபக் கழக அதிகாரிகளிடம் கூறியுள்ளனர்.

இதுகுறித்து, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

சேமிப்புக் கிடங்குகளில், பச்சை அரிசி, புழுங்கல் அரிசி, சர்க்கரை, துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, பாமாயில், கோதுமை எவ்வளவு உள்ளன; அவை எப்போது கொள்முதல் செய்யப்பட்டன; ரேஷன் கடைகளுக்கு, கடந்த மாதம் வழங்கிய பொருட்கள் எவ்வளவு என்பன போன்ற, அனைத்து விவரங்களையும் வழங்குமாறு, வாணிபக் கழக அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டு உள்ளது.

அவர்கள் அளிக்கும் விவரத்தில், உண்மை நிலவரம் மறைக்கப்பட்டால், அதற்கு காரணமான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இருப்பு விவரம் கிடைத்த பின், கூடுதல் பொருட்கள் கொள்முதல் குறித்து முடிவு செய்யப்படும். இவ்வாறு, அவர் கூறினார்.

## சென்னையில் 102 டிகிரி வெயில்:காரணம் என்ன: வானிலை மையம் விளக்கம்

கடந்த, ஒரு வாரமாக, 100 டிகிரி பாரன்ஹீட்டுக்கு கீழ் இருந்த வெயில், சென்னை, வேலுாரில், மீண்டும், 100 டிகிரியை கடந்து, 102 டிகிரி பாரன்ஹீட்டை தொட்டது.தென்மேற்கு பருவமழை, பகல் நேரங்களில் கடல் காற்று வீசுவதால், வட மாவட்டங்களான, சென்னை, வேலுார், காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம் உள்ளிட்ட பகுதிகளில், வெயில் குறையும் என, வானிலை ஆய்வு மையம் கணித்தது. ஆனால், சென்னை, வேலுார் பகுதிகளில் வெயில் குறைந்த பாடில்லை. மே மாதம், மூன்றாவது மற்றும் நான்காவது வாரங்களில், வெயில், 110 டிகிரி பாரன்ஹீட்டை தொட்டது. முன் பருவ மழை பரவலாகப் பெய்ததால், வெப்பநிலை சற்று குறைந்தது. ஆனால், தற்போது மீண்டும் வெயிலின் கடுமை அதிகரித்து உள்ளது.

நேற்று, சென்னை மற்றும் வேலுார் திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரத்தில், 102 டிகிரி; அரியலுாரில், 101 டிகிரி பாரன்ஹீட் வெப்பம் பதிவானது. ஆந்திராவில் வீசும் கடும் வெப்ப காற்று, தமிழக வட மாவட்டங்களுக்கு வருவதே, வெயிலின் தாக்கம் அதிகரிக்க காரணம் என, வானிலை ஆய்வு மையம் தெரிவிக்கிறது.- நமது சிறப்பு நிருபர் -

## 'குளுகான் - டி'யில் நெளிந்த புழுக்கள் : உணவு பாதுகாப்பு துறை விசாரணை

லக்னோ: உடலுக்கு சக்தியளிக்கும், கிளாஸ்கோ நிறுவனத்தின், 'குளுகான் - டி'யில் புழுக்கள் இருப்பதாக வந்த புகாரையடுத்து, உணவு பாதுகாப்பு கமிஷன் விசாரணையை துவக்கியுள்ளது.

### வாந்தி:

உ.பி.,யில் சமாஜ்வாதி கட்சியின் அகிலேஷ் யாதவ் தலைமையிலான ஆட்சி, நடக்கிறது.இம்மாநிலத்தின் புலந்த்ஷகரை சேர்ந்த பப்லு என்பவர், மளிகை கடையில் இருந்து, புதிய சுவையுடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள, 'குளுகான் - டி' அரை கிலோ பாக்கெட்டை வாங்கினார். வீட்டிற்கு வந்ததும், குழந்தைகளுக்கு தண்ணீரில் கலந்து கொடுத்தார். அதை குடித்ததும், குழந்தைகள் வாந்தி எடுக்க துவங்கினர். உடனே, 'குளுகான் - டி' பாக்கெட்டை திறந்து பார்த்தபோது, அதில் புழுக்கள் இருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தார். உடனே, பாக்கெட்டுடன், கடைகாரரிடம் சென்று புகார் செய்தார். கடைக்காரர், மொத்த வினியோகஸ்தரிடம் புகார் அளிக்கும்படி கூறினார்.மொத்த வினியோகஸ்தர், கிளாஸ்கோ நிறுவனத்திடம் புகார் அளிக்கும்படி கூறி அனுப்பினார். நிறுவனத்திடம் புகார் அளித்தும் எந்த பதிலும் இல்லாததால், தான் வாங்கிய, 'குளுகான் - டி'யின் மாதிரியையும், வாங்கிய கடையின் முகவரியுடன், உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகளிடம், பப்லு புகார் அளித்தார்.

### சோதனை:

புகாருடன் அளிக்கப்பட்ட மாதிரியை சோதனை செய்தபோது, புழுக்கள் இருப்பது உறுதியானது. இதை தொடர்ந்து, குறிப்பிட்ட மளிகை கடையில் உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் சோதனை நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். கிளாஸ்கோ நிறுவனம் மீதான விசாரணையை துவக்கியுள்ளனர்.

## மண்ணை பொன்னாக்கிய ஹிட்லர்



மதுரை மாவட்டம் சத்திரப்பட்டி பெரியபட்டியை சேர்ந்த முன்னாள் கப்பல்படை வீரர் ஹிட்லர். 53 வயதான இவர் 15 ஆண்டுகள் கப்பல்படையில் பணிபுரிந்தார். பின் விருப்ப ஓய்வில் சொந்த ஊருக்கு வந்தார். கப்பல்படை பணியில் கிடைத்த பணப் பலன்களை பாழாக்காமல் ஐந்து ஏக்கர் வாங்கி மண்ணைப் பொன்னாக்கினார். விவசாயம் பற்றி துளியும் தெரியாத ஹிட்லர் படிப்படியாக விவசாயப் பணிகளை குறுகிய காலத்தில் ஆர்வத்துடன் கற்றுத் தேர்ந்தார். நெல், கரும்பு சாகுபடிக்கு கூடுதல் தண்ணீர் தேவை. மல்லிகைப்பூ சாகுபடிக்கு கூடுதல் பணியாளர் தேவை என்பதால், சொட்டுநீர் பாசனம் மூலம் குறைந்த நீரில் அதிக மகசூல் தரும் பட்ரோஸ் விவசாயத்தில் ஹிட்லர் களம் இறங்கினார். இவரது ஆர்வத்துக்கு தோட்டக் கலைத்துறை நேசக்கரம் நீட்டியது. 50 சதவிகித மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைக்க உதவியது. தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக பட்ரோஸ் உற்பத்தியில் மதுரை மாவட்ட அளவில் சாதனை விவசாயியாக திகழ்கிறார்.

ஹிட்லர் கூறியதாவது: விவசாயம் பற்றி துளியும் எனக்கு தெரியாது. கப்பல்படையில் கிடைத்த பணம் முழுவதையும் விவசாயத்தில் முதலீடு செய்ய எண்ணினேன். 20 ஆண்டுகளுக்கு முன்பு ஐந்து ஏக்கர் நிலம் வாங்கி பண்படுத்தினேன். தோட்டக்கலைத்துறை மானியத்துடன் 70 சென்டில் "நிழல்வலை' அமைத்து பட்ரோஸ் வளர்த்து வருகிறேன். மேற்கு வட்டார வேளாண் துறையினர் மூலம் மண் புழு மற்றும் இயற்கை உரம் மட்டுமே பயன்படுத்தி வருவதால் சாகுபடி அதிகரித்து வருகிறது. பட்ரோஸ் செடியை நடவு செய்து மூன்றாவது மாதம் முதல் எட்டு ஆண்டுகள் வரை தொடர்ந்து பலன் கொடுக்கும். ஒன்றரை ஆண்டுகளுக்கு பின் செடிகளுக்கு கவாத்து செய்ய வேண்டும். மல்லிகைப்பூ விவசாயத்தை விட பட்ரோஸ் விவசாயத்தில் பராமரிப்பு குறைவு. நாள் ஒன்றுக்கு எட்டு முதல் பத்து கிலோ வரை பட்ரோஸ் கிடைக்கும். சாதாரணமாக கிலோ ரூ.70 வரை போகும். முகூர்த்த நாட்களில் ரூ.150 வரை விற்கும். குறைந்த முதலீட்டில் அதிக லாபம் தரும் ஒரே தொழில் பட்ரோஸ் வளர்ப்பு தான்," என்றார். பட்ரோஸ் சாகுபடி குறித்து 98945 98425க்கு அழுத்தலாம்.

**-கா.சுப்பிரமணியன், மதுரை.**

## மத்திய அரசின் கயிறு பொருட்கள் தயாரிப்பு பயிற்சிகள்



இன்று கயிறு பொருட்கள் உலகம் முழுவதும் ஏற்றுமதி ஆகிறது. கயிறு பொருட்கள் தயாரிக்க பல பயிற்சிகளை இந்திய அரசின் கயிறு வாரியம் அளிக்கிறது.

கயிறு மேட் தயாரிப்பு - 10 நாட்கள். கயிறு பிளிச்சிங் / டையிங் - 10 நாட்கள். கயிறு மரம் தயாரிப்பு - 10 நாட்கள். கயிறு வேஸ்ட் மூலம் மக்கு உர தயாரிப்பு - 5 நாட்கள். பாலியெஸ்டர் கயிறு மோல்டிங் - 5 நாட்கள். கார்பெட் தயாரிப்பு - 10 நாட்கள். இதுபோல் 35 வகை குறுகிய கால பயிற்சிகளை அளிக்கின்றன. முழு விபரங்களுக்கு : இயக்குநர், RDTE, CC-RI, Kalavoor, Alappuzha, Kerala. Ph: 0477 225 8480, www.ccriindia.org.

தமிழ்நாட்டில் கிளை அலுவலகம் உள்ளது. மண்டல கயிறு வாரிய அலுவலகம், 5, அழகப்பா லே அவுட், வெங்கடேசா காலனி, பொள்ளாச்சி-642 001. கோவை மாவட்டம், தமிழ்நாடு. போன் : 04259 222 450. இவர்கள் 193 அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் உதவியோடு பல பயிற்சிகளை அளிக்கின்றன. COIR BOARD, COIR House, Govt. of India, M.G.Road, Ernakulam, Kochi-682 016. Ph: 0484 235 180. www.coinboard.gov.in

**- எம்.ஞானசேகர்,**

**விவசாய மற்றும் தொழில் ஆலோசகர், 93807 55629**

**சின்ன சின்ன செய்திகள்!**



**பாக்டீரியா:** பூச்சிகளுக்கு நோய் உண்டாக்குவதில் 100 வகை பாக்டீரியாக்கள் உண்டென அறியப்பட்டுள்ளது. இவை தாக்கிய பூச்சிகளில் அதிகமாக நடமாட முடியாது. பாதிக்கப்பட்ட புழு, பூச்சிகளின் வாயிலிருந்தும், உடலின் பின் பகுதியிலிருந்தும் ஊண் திரவம் வெளிவந்து கொண்டேயிருக்கும். உடல் முழுவதும் கறுப்பு நிறமாக மாறி இறுதியில் இறந்து விடும்.

பருத்தி பச்சைக்காய்ப்புழு, இளஞ்சிவப்பு காய்ப்புழு, எலுமிச்சை வண்ணத்துப்பூச்சி, ஆமணக்கு காவாப்புழு, முட்டைக்கோசு காவாப்புழு, வைரமுதுகுப்பூச்சி போன்றவை பாக்டீரியாவால் தாக்கப்படும் முக்கிய பூச்சிகளாகும். பேசில்லஸ் துரிஞ்சியன்சிஸ் (BT) என்ற பாக்டீரியா பூச்சி மருந்துகளால் கிடைக்கிறது.

**இளங்குருத்துப்புழு தாக்கும் கரும்பு** : இப்புழு 10 முதல் 100 நாட்கள் வரையிலான வயதுடைய இளங்கரும்புப் பயிரின் குருத்துக்களை தாக்குவதில் பயிரின் நடுக்குருத்து முதலில் வாடி பிறகு காய்ந்து விடும். பிடித்து இழுத்தால் அது கையோடு வரும். இதனைக்கட்டுப்படுத்த கரும்பு நடவு செய்த 45 நாட்கள் கழித்து மண்ணை அணைக்க வேண்டும்.

தக்கைப்பூண்டினை ஊடுபயிராக பயிரிடுவது நல்ல பலனைத்தரும். 1.5 X 1012 POB / ha கரானுலோசிஸ் வைரஸ்களை ஒரு எக்டரில் நடவு செய்த 35வது, 50வது நாளில் தெளிக்க வேண்டும். டாக்னிட் ஒட்டுண்ணியான ஸ்டர்மியோப்சிஸ் இன்பெரன்ஸன் கிராவிட் பெண் பூச்சிகள் 125 ஒரு ஏக்கர் வயலினுள் விடலாம். முட்டை ஒட்டுண்ணியான ட்ரைகோ கிரம்மா கைலோனிஸ் இரண்டு சி.சி அட்டையை நட்ட நான்கு மாதத்திலிருந்து இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை ஆறு முறை கட்ட வேண்டும்.

**டிரைகோடெர்மோவிரிடி** : என்ற பூசணி எதிர் நுண்ணுயிரி மண்ணில் வாழ்ந்து பயறுவகை பயிர்களின் வேர்களைத் தாக்கும் பூஞ்சாளங்களை அழிக்க வல்லது. இப்பூசனத்தை விதை நேர்த்தி செய்ய 1 கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவில் கலந்து பயன்படுத்தலாம். இரண்டரை கிலோ டிரைகோடெர்மோ விரிடியை 50 கிலோ தொழு உரத்துடன் கலந்து 15 நாட்கள் நிழலில் வைத்து இரண்டு நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் தெளித்து கடைசி உழவின் போது ஒரு எக்டரில் ஒரே சீராக மண்ணில் இடலாம்.

**குறுந்தானிய உணவுகள்** : குறுந்தானிய உணவுகளில் பாயாசம் முதல் பிரியாணி வரை அனைத்து உணவுகளையும் தயாரிக்கலாம். மற்றும் பொங்கல் (இனிப்பு மற்றும் கார பொங்கல்) தயிர்சோறு, தக்காளிச்சோறு, பிரியாணி, களிமிக்ஸ், முருக்கு, அதிரசம், போளி, இட்லி, தோசை, இடியாப்பம், குக்கீஸ், நூடுல்ஸ் என பல வகையான உணவுகளைத் தயாரிக்கலாம்.

கோதுமை உணவு உண்போர் "சீலியாக்' என்ற நோயால் பலரும் அவதிப்படுகிறார்கள். எனவே கோதுமை உணவு உண்போர் குறுந்தானியங்கள் மற்றும் குறுந்தானிய உணவுகளை பயன்படுத்துவதன் மூலம் சீலியாக் (Ciliac Diseason) நோய் தாக்கும் நம்மை பாதுகாக்கலாம். குறுந்தானிய உணவுகள் குளூட்டன் (Gluten) தன்மை இல்லாததே அதன் சிறம்பம்சமாகும். ஒரு கப் சமைத்த குறுந்தானிய உணவை ஒரு நாளைக்கு

ஒருவருக்கு தேவையான 26.4 சதம் மாங்கனீசியம் மற்றும் 24 சதம் பாஸ்பரஸ் சத்துக்கள் கிடைக்கும். உடல் பருமன் மற்றும் அதன் தொடர்பான நோய்களால் அவதிப்படுவோருக்கு குறுந்தானியத்தில் உள்ள நார்ச்சத்து மிகச்சிறந்த உணவாகும். தகவல் : டாக்டர் சி.பார்வதி, பேராசிரியர் மற்றும் தலைவர், மனையியல். தொலைபேசி : 0452 - 242 4684.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவை தொகை ரூ.17 கோடி

திருவாலங்காடு:கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு ஓட்டிய, 170 விவசாயிகளுக்கு, 17 கோடி ரூபாய் பில் தொகை வழங்கப்படாததால் விவசாயிகள், வட்டி கட்ட முடியாமல் தவிக்கின்றனர். திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை, திருவாலங்காட்டில் இயங்கி வருகிறது. இந்த ஆலைக்கு, 12 ஆயிரம் விவசாயிகள் கரும்பு ஓட்டி வருகின்றனர்.கடந்த ஆண்டு, நவம்பர் மாதம் 4ம் தேதி துவங்கிய, கரும்பு அரவை, இந்தாண்டு ஏப்., 7ம் தேதி வரை நீடித்தது. ஒரு டன் கரும்பு, 2,650 ரூபாயில், ஒரு டன்னுக்கு, 100 ரூபாய் லாரி வாடகை பிடித்தம் போக, 2,550 ரூபாய், ஆலை

நிர்வாகம் வழங்கி வருகிறது. 2014--15ம் ஆண்டில், 2.75 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய திட்டமிட்டு, 2.60 லட்சம் டன் கரும்பு அரவை செய்து நிறுத்தப்பட்டது.இதில், கடந்த மார்ச் 1ம் தேதியில் இருந்து, ஏப்., 7ம் தேதி வரை, ஆலைக்கு, 170 விவசாயிகள், 66,700 டன் கரும்புகளை வெட்டி அனுப்பியுள்ளனர். ஆலைக்கு கரும்பு ஓட்டி, இரண்டு மாதங்கள் ஆகியும் இதுவரை, விவசாயிகளுக்கு பில் தொகை, 17 கோடி ரூபாய் வழங்கப்படவில்லை. இதனால் கடன் வாங்கி, பயிர் செய்த விவசாயிகள் வட்டி கட்ட முடியாமல் அவதிப்படுகின்றனர். அனுப்பிய கரும்புகளுக்கு

உரிய தொகை வழங்குமாறும், விவசாயிகள் பலமுறை ஆலை நிர்வாகத்திடம் கோரிக்கை வைத்தும் எவ்வித நடவடிக்கையும் இல்லை.

இதுகுறித்து, கூட்டுறவு சர்க்கரை ஆலையின் அதிகாரி ஒருவர் கூறுகையில், 'கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய தொகை, 17 கோடி ரூபாய், அரசிடம் இருந்து தான் பெற்று தர வேண்டும்' என்றார்.மேலும், 'இந்த ஆலையின் மூலம் கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய தொகை குறித்தும் பட்டியல் மற்றும் தொகை தயாரித்து, நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசுக்கு கடிதம் அனுப்பி உள்ளோம். நிதி வந்தவுடன் விவசாயிகளுக்கு நிலுவை தொகை வழங்கப்படும்' என்றார்.

**மண் மாதிரி சேகரிப்பு களப்பணியாளர்களுக்கு பயிற்சி**

திருத்தணி: திருத்தணி வேளாண் துறை அலுவலகத்தில், மண்வள அட்டை இயக்கம், மண்மாதிரிகள் சேகரம் சார்பில், 80 களப்பணியாளர்களுக்கு ஒரு நாள் பயிற்சி நடந்தது.

திருத்தணி வேளாண் உதவி இயக்குனர் பிரசாத் களப்பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தார். பின், அவர் கூறியதாவது: 'திருத்தணி, பள்ளிப்பட்டு, ஆர்.கே.பேட்டை மற்றும் திருவாலங்காடு ஆகிய ஒன்றியங்களில் உள்ள விவசாய நிலங்களில், வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு இலவச மண் பரிசோதனை செய்து தரப்படுகிறது. இந்தாண்டில், திருத்தணி ஒன்றியத்தில் சூர்யநகரம், கோரமங்கலம், அகூர், சத்திரஞ்ஜெயபுரம், பீரகுப்பம், எஸ்.அக்ரஹாரம், தாடூர், சின்னகடம்பூர் மற்றும் கார்த்திகேயபுரம் ஆகிய ஒன்பது ஊராட்சிகளில், இலவச மண் பரிசோதனை

செய்யப்படவுள்ளது. எங்கள் களப்பணி யாளர்கள், ஒரு நாளைக்கு, 10 - 20 விவசாயிகளின் நிலத்தில் இலவச மண் பரிசோதனை நடத்தி, அவர்களுக்கு மண் அட்டை வழங்குவர். மண் பரிசோதனைக்காக,

விவசாயிகள் பணம் எதுவும் செலுத்த தேவையில்லை. இவ்வாறு, அவர் கூறினார்.

## தோட்டக்கலை துறை கிளை அலுவலகம் மேல்மலையனூரில் அமைக்கப்படுமா?

அவலூர்பேட்டை:மேல்மலையனூர் ஒன்றியத்தில் தோட்டக்கலை துறை கிளை அலுவலகம் செயல்பட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.மேல்மலையனூர் ஒன்றியத்தில் 55 ஊராட்சிகள் உள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட துணை கிராமங்கள் உள்ளன. விவசாயிகள் நலனுக்காக மேல்மலையனூர் ஒன்றியத்தில் வேளாண் விரிவாக்க மையம் மற்றும் தோட்டக்கலை கிளை அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இது வரையில் தோட்டக்கலை துறை கிளை அலுவலகத்தின் போர்டும் எங்கும் காணப்படவில்லை.பூந்தோட்டம் அமைப்பதற்கு மின் இணைப்பு பெறுவதற்காக விவசாயிகள் பலரும் செஞ்சியில் உள்ள தோட்டக்கலை துறை விரிவாக்க மையத்திற்கு சென்று அனுமதி பெற்று வருகின்றனர்.

இதற்காக விவசாயிகள் பெரும் அவதிக்குள்ளாகின்றனர்.

விவசாயிகள் மா, கொய்யா, சப்போட்டா, மாதுளை , தேக்கு உள்ளிட்ட பல வகையான மரங்களை வளர்க்கலாம். வெண்டை, கத்தரிக்காய் உள்ளிட்ட காய்கறி தோட்டங்களுக்கு சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பதற்கு ஆலோசனை வழங்கவும், அரசின் சலுகைகளை தெரிந்து கொள்ளவும் இயலாத சூழ்நிலை உள்ளது.

ஏழை, எளிய விவசாயிகளின் நலன் கருதி மேல்மலையனூர் ஒன்றியத்தில் தோட்டக்கலை துறை கிளை அலுவலகம் செயல்படுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**தியாகதுருகத்தில் கோடை மழை விருகாவூர் தடுப்பணை நிரம்பியது**

தியாகதுருகம்:விருகாவூர் தடுப்பணை கோடை மழையால் நிரம்பியது. நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து கிணற்று நீர் பாசனம் விவசாயிகளுக்கு கைகொடுத்துள்ளது.

தியாகதுருகம் ஒன்றியத்தின் வழியே செல்லும் கோமுகி ஆற்றில் விருகாவூர் அருகே தடுப்பணை கட்டப்பட்டுள்ளது. கடந்த நவ., மாதம் கல்வராயன்மலையில் பெய்த கனமழை காரணமாக கோமுகி அணை நிரம்பியது. உபரி நீர் திறந்துவிடப்பட்டதால் தடுப்பணைகளும் நிரம்பி வழிந்தன.

இதன் காரணமாக இப்பகுதியில் ஓரளவு நீர்வளம் குறையாமல் தக்க வைக்கப்பட்டது. தொடர் வறட்சி காரணமாக ஒரு மாதத்திற்கு கூட தடுப்பணையில் தண்ணீர் தேங்கி நிற்காமல் வறண்டது.

இப்பகுதியில் கிணற்று பாசனத்தை ஆதாரமாக கொண்டு 10 ஆயிரம் ஏக்கர் பரப்பில் விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்துள் ளனர்.

கோடையில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால், பயிர்களுக்கு நீர் பாய்ச் சுவதில் சிக்கல் ஏற்பட்டது. இதன் காரணமாக தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு கரும்பு பயிர்கள் வாடிய நிலையில் இருந்தன.

கடந்த மாதம் 22ம் தேதி இரவு தியாகதுருகம் பகுதியில் கோடைமழை கொட்டியது. கல்வராயன் மலையிலும் மழை அதிகம் பெய்ததால், கோமுகி அணையின் நீர்மட்டம் உயர்ந்தது. இதையடுத்து அணையில் இருந்து ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால் தடுப்பணைகளுக்கு நீர்வரத்து கிடைத்து நிரம்பின.

கோடைக்காலத்தில் எதிர்பாராமல் பெய்த திடீர் மழை காரணமாக நீரோட்டம் ஏற்பட்டதால் ஆற்றுப் படுகையில் நீர்வளம் தக்க வைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து கிணற்று பாசன விவசாயிகளுக்கு தக்க தருணத்தில் கைகொடுத்துள்ளதால் நிம்மதியடைந்துள்ளனர்.

## காலநிலையில் மாற்றம் காய்கறி விவசாயத்தில் 'வேகம்'

கோத்தகிரி:நீலகிரி மாவட்டத்தில் கால நிலை மாற்றம் ஏற்பட்டு வருவதால், விவசாயிகள் மலை காய்கறி விவசாயத்தில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.நீலகிரி மாவட்டத்தில் நடப்பாண்டு வழக்கத்திற்கு மாறாக, நல்ல மழைப்பெய்துள்ளது. அக்னி வெயிலின் தாக்கம் இருந்ததற்கான அடையாளமே இல்லாத அளவில், மழைப் பெய்ததால், நீர் ஆதாரங்கள் நிறைந்துள்ளன. விவசாய நிலங்களிலும் தேவையான ஈரப்பதம் உள்ளது.இதனால், மலைக்காய்கறி சாகுபடி செய்வதற்காக, விவசாயிகள் நிலங்களை பண்படுத்தி, தயார்படுத்தும் பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர்.நடப்பாண்டு, முட்டைகோஸ் பயிரிட்டிருந்த விவசாயிகளுக்கு போதிய விலை கிடைக்காததால், இழப்பை சந்தித்து வருகின்றனர்.இந்நிலையில், தற்போதைய கால நிலை மாற்றத்தால், விவசாயிகள் மலைக்காய்கறி சாகுடி செய்வதில் முனைப்பு காட்டி வருகின்றனர்.கோத்தகிரி பகுதியில் நெடுகுளா, சுள்ளிகூடு, எரிசிபெட்டா, வ.உ.சி., நகர், மிளிதேன் மற்றும் கூக்கல்தொரை பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் மலைக்காய்கறி பயிரிடப்படுகிறது.நடப்பாண்டு, தேவையான மழை கிடைத்துள்ளதால், காரட் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## ஒட்டன்சத்திரத்தில் வெங்காயம் விலை உயர்வு

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் சின்ன வெங்காயம் ஒரு கிலோ ரூ.52 க்கு விற்றது. இருந்த போதிலும் பல்லாரி வெங்காயத்தின் விலையில் மாற்றம் இல்லை.ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் சின்ன வெங்காயம் அதிக நிலப்பரப்பில் பயிரிடப்படுகிறது.

கடந்த சில நாட்களாக சின்ன வெங்காயத்தின் வரத்து குறைந்து வந்தது.இதனால் விலை ஏறுமுகமாக காணப்பட்டது. நேற்று சின்ன வெங்காயம் ஒரு கிலோ அதிகபட்ச விலை ரூ.52 ஆக இருந்தது. ஆனால் உள்ளூர் பகுதியில் இருந்து பல்லாரி வெங்காயம் வரத்து இல்லை. ஆந்திரா மாநிலத்தில் இருந்து வெங்காயம் கொண்டு வரப்படுகிறது. இதனால் இந்த வெங்காயம் விலை மாற்றமின்றி கிலோ ரூ.28க்கு விற்பனையானது.

சில நாட்களாக கோடை மழை பெய்து வருவதும், வெங்காயம் விலை ஏற்றத்திற்கு காரணமாக உள்ளது. மழை காரணமாக விவசாயிகள் வெங்காயம் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். பாதுகாக்கப்பட்ட பழைய வெங்காயத்தை வாங்க விவசாயிகள் ஆர்வம் காட்டினர். இது கிடைக்கப்பெறாத வியாபாரிகள் புதுவெங்காயத்தை வாங்கினர். இதனால் இதன் விலை ரூ.45லிருந்து ரூ.52ஆக அதிகரித்தது.கமிஷன் கடை உரிமையாளர் மூர்த்தி கூறுகையில்,"" பழைய வெங்காயம் முழுவதையும் விவசாயிகள், நடவுக்காக வாங்கிச் சென்றதால் அதற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது," என்றார்.

## வெள்ளாடு வளர்ப்பில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்

தாண்டிக்குடி:தாண்டிக்குடி மலைப்பகுதியில் வெள்ளாடு வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம் காட்டுவது அதிகரித்துள்ளது.மலைப்பகுதியில் விவசாயமே பிரதானம் என்ற நிலையில் ஆடு வளர்ப்பை விவசாயிகள் மறந்து விட்டு ரசாயன உரம், பூச்சி மருந்துகள் உதவியுடன் சாகுபடி செய்தனர். இதனால் மகசூல் கிடைத்தாலும் மண் வளம் பாதித்தது. இதையடுத்து தொழு உரங்களை பயன்படுத்த துவங்கினர். தற்போது ஆடு வளர்ப்பில் விவசாயிகள் தீவிரம் காட்டி தொழு உரங்களை தாங்களே உற்பத்தி செய்கின்றனர்.வெள்ளாடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள கருத்தப்பாண்டி கூறியதாவது: கடந்த 2 ஆண்டுகளாக ஆடு வளர்ப்பில்

ஈடுபட்டுள்ளேன். இவற்றை முறையாக பராமரித்து, மேய்ச்சலுக்கு விட்டு, கண்காணிப்பதால் அதிகளவில் பால் கிடைக்கிறது. ஆண்டுக்கு இருமுறை குட்டி போடுவதால் விரைவாக பல்கி பெருகுகிறது. ஆண்டுக்கு ரூ.20 ஆயிரம் வரை ஆடு விற்பனை மூலம் கிடைக்கிறது. எனக்கு 55 வயதை கடந்த நிலையில் ஆடு வளர்ப்பு நிம்மதியை தருகிறது, என்றார். இதனால் விவசாயிகள் பலர் ஆர்வமாக ஆடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

## செந்நாய்கள் நடமாட்டம் விவசாயிகளுக்கு எச்சரிக்கை

கம்பம்:கம்பம்மெட்டு மலையடிவாரங்களில் செந்நாய்கள் கூட்டமாக அதிகளவில் சுற்றித்திரிகின்றன. இதனால் கவனத்துடன் இருக்குமாறு விவசாயிகளுக்கு வனத்துறை எச்சரித்துள்ளது. கம்பம் மெட்டு வனப்பகுதியில் வனஉயிரினங்கள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக செந்நாய்களின் நடமாட்டம் மிகவும் அதிகமாக உள்ளது. கம்பம்மெட்டு மலையடிவாரத்தில் தோட்டத்தில் இருந்த காவல் நாய்கள் மூன்றை சிறுத்தைகள் அடித்து கொன்றது என தகவல் வெளியானது. தோட்டத்து விவசாயிகளின் புகாரை தொடர்ந்து வனத்துறையினர் அப்பகுதி முழுவதும் கண்காணிப்பில் ஈடுபட்டனர். அப்போது தோட்டங்களில் வளர்க்கப்பட்ட நாய்களை கொன்றது, சிறுத்தைகள் இல்லை, செந்நாய்கள் என்பது தெரியவந்தது.

வனத்துறையினர் கூறியதாவது: கம்பம் மெட்டு மலையடிவாரங்களில் சமீபத்தில் செந்நாய்களின் நடமாட்டம் அதிகம் உள்ளது. செந்நாய் கூட்டங்கள் மொத்தமாக வரிசையாக வரும். எனவே மலையடிவாரங்களில் விவசாய பணிகளுக்கு செல்லும் விவசாயிகள், கால்நடை மேய்ப்பவர்கள், காவல் காக்க செல்பவர்கள் உஷாராக இருக்க வேண்டும்' என்றனர்.

## இறால்களுக்கு அதிக கவனம் மீனவர்களுக்கு எச்சரிக்கை

ராமேஸ்வரம்:இன்று (ஜூன் 10) மீன்பிடிக்க செல்லும் மீனவர்கள், இறால், கணவாய் மீன்களை பதப்படுத்த அதிக கவனம் செலுத்த வேண்டும், என ராமேஸ்வரம் மீனவர் சங்க நிர்வாகிகள் வேண்டுகோள் விடுத்தனர். இறால் மீன் விலை வீழ்ச்சி கண்டித்து, ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் ஜூன் 6 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். ஜூன் 8 ல், ஏற்றுமதி நிறுவனத்தினருடன் மீனவர்கள் தூத்துக்குடியில் நடத்திய பேச்சு வார்த்தையில், இறால், கணவாய் மீனுகளுக்கு கூடுதல் விலை வழங்கப்படும் என ஏற்றுமதியாளர்கள் உறுதியளித்தனர்.

அதைத்தொடர்ந்து, மீனவர்கள் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்று, இன்று (ஜூன் 10) முதல் மீன்பிடிக்க கடலுக்கு செல்கின்றனர். நேற்று ராமேஸ்வரத்தில் நடந்த மீனவர் சங்க நிர்வாகிகள் கூட்டத்திற்கு பின், சங்க தலைவர் என்.ஜே.போஸ் கூறியதாவது:ஏற்றுமதியாளர்கள் ஆலோசனைப்படி இறால், கணவாய் மீன்களுக்கு கூடுதல் ஐஸ் வைத்து பதப்படுத்தி, அதிக கவனம் செலுத்தினால், மீன்கள் கெட்டு போகாமல், அதிக விலை கிடைக்கும். இலங்கை சிறையில் உள்ள 14 மீனவர்களை விடுவிக்கவும், இலங்கை கரையில் சேதமடைந்து கிடக்கும் படகுகளின் உரிமையாளருக்கு மத்திய, மாநில அரசு நிவாரணம் வழங்க வேண்டும், என்றார்.

## புறக்கடை கலப்பின கோழி வளர்த்தால் புரத பற்றாக்குறையை நீக்கலாம்

கல்லல்:"கிராமப்புற பகுதிகளில் புரத பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய புறக்கடை (வீட்டின் சுற்றுபுறம்) கோழி வளர்ப்பை மேற்கொள்ள' வேளாண் அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.நகர்புறத்தில் வசிக்கும் மக்களின் சராசரி முட்டை மற்றும் கோழி இறைச்சி உட்கொள்ளும் திறன், ஆண்டுக்கு 100 முதல் 150 முட்டை, 3 முதல் 5 கிலோ இறைச்சியாக இருக்கின்றது. ஆனால், கிராமப்புற மக்களின்

உட்கொள்ளும் திறனானது ஆண்டுக்கு வெறும் 5 முதல் 20 முட்டை, 750 கிராம் இறைச்சி என்ற அளவிலேயே உள்ளது. கிராமப்புற மக்கள் அதிக மாவு மற்றும் குறைந்த புரதசத்து கொண்ட அரிசி மற்றும் கோதுமையையே உணவாக உட்கொள்கின்றனர். இதனால் புரத பற்றாக்குறை ஏற்பட்டு, கர்ப்பிணி பெண்கள், தாய்மார்கள், வளரும் குழந்தைகள் பலவித நோய் தாக்குதலுக்கு ஆளாகின்றனர். இதை நிவர்த்தி செய்ய, கிராமப்புற மக்கள், அதிக இறைச்சி மற்றும் முட்டை வழங்கும் கோழி வகைகளை வளர்த்து, புரத பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதுடன், கூடுதல் வருமானத்தையும் ஈட்டலாம், என வேளாண் அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். கல்லல் வேளாண் உதவி இயக்குனர் கணேசன் கூறியதாவது: கிராமப்புற புறக்கடைகள் சத்துமிக்க பல உணவு ஆதாரங்களை கொண்டுள்ளன. எனவே, கிரிராஜா, வனராஜா ஆகிய கோழி வளர்ப்பில் ஈடுபடலாம். கலப்பின கோழி ரகமான கிரிராஜா ஓர் அதிசய பறவை. இக்கோழிகள் முட்டையிடுவதிலும் இறைச்சி தருவதிலும் சிறந்த ரகமாகும். இக்கோழி வாழும் வரை முட்டையிட்டு, பின்னர் உணவாக பயன்படுகிறது. திறந்த வெளியில் 10 முதல் 20 கோழிகளை வைத்து, முட்டைக்காக புறக்கடையில் கோழி வளர்க்கலாம். பிற ரகங்களை போல தனியாக உணவு கொடுக்க வேண்டிய அவசியமில்லை. புறக்கடையில் உள்ள உணவையே உட்கொண்டு தன் வாழ்க்கையை சிரமமின்றி வாழ்ந்திடும். இறைச்சிக்காக கோழி வளர்க்கும்போது சிறிய கொட்டகை அமைத்து வளர்க்க வேண்டும். தற்போது வளர்க்கப்படும் நாட்டு கோழி இனங்களை காட்டிலும் மூன்று மடங்கு உடல் எடையும், முட்டை உற்பத்தியும் செய்யும்.கல்லல் வட்டாரத்தில் கல்லுப்பட்டி, தளக்காவூர் கிராமங்களில் இரண்டு குழுக்கள் துவங்கப்பட்டு, 200 கிரிராஜா குஞ்சுகள் வழங்கப்பட்டு வளர்க்கப்பட்டு வருகிறது. கல்லல் வேளாண் அலுவலகத்துக்கு உட்பட்ட

பகுதியில் கோழி வளர்க்க விரும்புவோர், வேளாண் உதவி மையத்தை தொடர்பு கொள்ளலாம், என்றார்.

## பூச்சிக்கொல்லி மருந்து காய்கறி விவகாரம் கேரளாவில் பிரச்னை பூதாகாரமாகிறது

நாகர்கோவில்:அதிக அளவில் பூச்சிக்கொல்லி மருந்து பயன்படுத்தப்படும் வெளிமாநில தோட்டங்களில் உள்ள காய்கறிகள் கேரளாவுக்கு கொண்டு வர ஜூலை 15 முதல் தடை விதிக்கப்படுகிறது. சுகாதரத்துறை அமைச்சர் சிவகுமார், உணவுத்துறை அமைச்சர் அனூப்ஜேக்கப் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற அதிகாரிகள் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. அண்மைகாலமாக தமிழக காய்கறிகளில் அதிக அளவு பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்படுத்துவதாக கேரள புகார் கூறி வருகிறது. இது தொடர்பாக உணவு பாதுகாப்பு இணை ஆணையர் அனில்குமார் தலைமையில் மூன்று பேர் குழு தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் காய்கறிகள் உற்பத்தி செய்யும் தோட்டங்களை ஆய்வு செய்தனர். இந்த கமிட்டி அளித்த அறிக்கையின் படி தமிழக அரசுக்கு எழுதப்பட்ட கடிதத்தில், பூச்சிக்கொல்லி மருந்தின் பயன்பாட்டை கட்டுப்படுத்தாத பட்சத்தில் அது இருமாநில மக்களையும் பாதிக்கும் என்று கூறப்பட்டிருந்தது. இந்நிலையில் வெளிமாநில காய்கறிகளை இறக்குமதி செய்வதில் கட்டுப்பாடுகளை விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி கேரளாவில் காய்கறி வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு பதிவு மற்றும் உரிமம் வழங்க இரண்டு அமைச்சர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஜூலை 15 முதல் உணவு பதிவு பெறாமல் வரும் காய்கறிகள் செக் போஸ்டுகளில் தடுக்கப்படும். வியாபாரிகள் கூட்டம்: காய்கறி மற்றும் பழங்களில் பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பது கடுமையான கேடு விளைவிக்கும் என்ற விழிப்புணர்வை வெளிமாநில உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக கேரள மாநிலத்தில் உள்ள மொத்த காய்-கனி வியாபாரிகளின் கூட்டம் நேற்று உணவு பாதுகாப்புத்துறை ஆணையர் அனுபமா தலைமையில்

திருவனந்தபுரத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இதில் மாநிலம் முழுவதுமிருந்து மொத்த வியாபாரிகள் கலந்து கொண்டனர். இதில் பேசிய வியாபாரிகள், இயற்கை உரம் இட்டு உற்பத்தி செய்த காய்கறிகள் என்று கூறி வியாபாரம் நடத்தும் ஆர்கானிக் ஸ்டோர்களிலும் பூச்சிக்கொல்லி மருந்து கலந்த காய்-கனிகள் விற்பதாக குற்றம்சாட்டினர். இதற்கு பதிலளித்த அனுபமா, உடனடியாக அந்த கடைகளில் உள்ள காய்கறிகளும் பரிசோதிக்கப்படும் என்று கூறினார். தடை விதிப்பதால் கேரளாவில் காய்கறி தட்டுப்பாடு வரும் என்று வியாபாரிகள் பலரும் பிரதிபலித்தனர். இறுதியில் இந்த பிரச்னை தொடர்பாக முதல்வர் உம்மன்சாண்டி தலைமையில் கூட்டத்தை கூட்டி, தமிழக அரசுடன் தொடர்பு கொண்டு ரசாயண உரத்தை கட்டுப்படுத்தவும், பூச்சிக்கொல்லி மருந்து பயன்படுத்தாத காய்கறி அனுப்ப ஏற்பாடு செய்ய கேட்கவும் முடிவு செய்யப்பட்டது. நடவடிக்கை: இதற்கிடையில் கேரள அரசு கடிதம் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுக்க தொடங்கியுள்ளது. நேற்று சென்னையில் இது தொடர்பாக விவசாயத்துறை அதிகாரிகளின் இரண்டு கூட்டங்கள் துறை செயலாளர் ராஜேஷ்லக்கானி தலைமையில் நடைபெற்றது. மேலும் தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் காய்கறிகளை பரிசோதனை செய்து இன்று ( புதன்) மாலைக்குள் அறிக்கை சமர்ப்பிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

தினகரன்

**மூலிகைகளின் ராணி துளசி...**



மூகைகளின் ராணியான துளசி, அதன் மருத்துவகுணத்தால், ஆயுர்வேத மருத்துவத்தில் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதிலும் இதன் இலைகள் மட்டு மின்றி, அதன் பூக்களிலும் எண்ணற்ற மருத்துவ குணங்கள் நிறைந்துள்ளன. காய்ச்சல் என்றதும் மருத்துவரை தான் நாம் தேடி ஓடுவோம். ஆனால், உடனே மாத்திரையை வாங்கிப்போடாமல், துளசி இலையை வாயில் போட்டு மென்று வாருங்கள். இதனால் காய்ச்சல் குறைந்துவிடும்.

அதேபோல துளசியை நீரில் போட்டு கொதிக்க வைத்து, அந்த நீரால் வாயை கொப்பளித்தால், தொண்டைப்புண் குணமாகும். ஈறுகளில் ஏதேனும் பிரச்சனை இருந்தாலோ அல்லது வாய் துர்நாற்றம் அடித்தாலோ, துளசியை உலர வைத்து, பொடி செய்து, அத்துடன் கடுகு எண்ணெய் ஊற்றி பேஸ்ட் செய்து, ஈறுகளில் தடவி, தேய்த்து கழுவ வேண்டும். இப்படி செய்தால், வாய் பிரச்னைகள் அகலும். தினமும் காலையில் எழுந்ததும், வெறும் வயிற்றில் துளசி இலையை சாப்பிட்டு வந்தால், அவை ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தி, இதயநோய்

வரும் அபாயத்தைக் குறைக்கும். கடுமையான சளி மற்றும் இருமலால் அவஸ்தைப்பட்டால், துளசி இலையை மென்று, அதன் சாற்றை விழுங்கவேண்டும். இதனால் அதில் உள்ள மருத்துவ குணத்தால், சளி, இருமல் பறந்து விடும். நீரிழிவு நோயாளிகள் துளசி இலையை சாப்பிட்டு வந்தால், ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு குறைந்து விடும். இன்சுலின் சீராக சுரந்து, நீரிழிவை கட்டுப் பாட்டில் வைக்கும். துளசி இலையை சாறு எடுத்து, அதில் சிறிது தேன் கலந்து குடித்து வந்தால், சிறுநீரக கற்கள் மற்றும் சிறுநீரக பாதையில் ஏதேனும் தொற்று இருந்தாலும் குணமாகும்.

**ஆரோக்கியப் பெட்டகம்: வாழைக்காய்**




'வாழையடி வாழையாக' வாழும்படி வாழ்த்துகிறோம். வாழையின் அடி முதல் நுனி வரை அனைத்துமே நமக்குப் பயன்படுவதை அறிவோம். வாழையின் அனைத்துப் பகுதிகளுமே மருத்துவ குணம் வாய்ந்தவை. வாழை பற்றிய முதல் வரலாற்றுக் குறிப்பை கி.மு. 600 ஆண்டு புத்த மத ஏடுகளில் காணலாம். மாமன்னர் அலெக்சாண்டர் கி.மு. 327ல் இந்தியாவில் வாழைப்பழத்தை சுவைத்ததற்கான குறிப்புகள் உள்ளன. கி.பி. 200ம் ஆண்டில் சீனாவில் ஒழுங்குபடுத்திய வாழை சாகுபடி

நடந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. ‘‘வாழையை ஏழைகளின் எனர்ஜி உணவு என்றே சொல்லலாம். இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் அனேக மக்களின் பிரதான உணவுகளில் வாழைக்கே முன்னுரிமை உண்டு. உருளைக்கிழங்கை சமைக்கிற அதே முறைகளில் வாழைக்காயையும் சமைக்கலாம். பொரிக்கலாம். வேக வைக்கலாம். வறுக்கலாம்...’’ சுவையாக ஆரம்பிக்கிற ஊட்டச்சத்து நிபுணர் மீனாட்சி பஜாஜ், வாழையின் மகத்துவங்களையும் மருத்துவ குணங்களையும் பற்றித் தொடர்கிறார். ‘‘90 நிமிட உடற்பயிற்சிக்குப் பிறகு தேவைப்படுகிற எனர்ஜியை 2 வாழைப்பழங்களின் மூலம் பெற்றுவிட முடியும். உலக அளவில் விளையாட்டு வீரர்களின் விருப்பமான பழங்களில் வாழைப்பழத்துக்கே முதலிடம் என்பதில் சந்தேகமில்லை. இன்ஸ்டன்ட் எனர்ஜியை கொடுக்க மட்டுமின்றி, இன்னும் ஏராளமான உடல்நலக் கோளாறுகளை எதிர்த்துப் போராடக்கூடிய சக்தி வாழைக்கு உண்டு.

**வாழையில் என்ன இருக்கிறது?**

ஆற்றல்- 89 கிலோ கலோரிகள்,

மொத்த கொழுப்பு - 0.3 கிராம்

சோடியம் - 1 கிராம்

கார்போஹைட்ரேட் - 23 கிராம்

நார்ச்சத்து - 2.6 கிராம்

சர்க்கரை - 12 கிராம்

புரதம் - 1.1 கிராம்

நையாசின் - 0.665மி.கி

ரிபோஃப்ளோவின் - 0.073மி.கி.

வைட்டமின் ஏ - 3.00 மைக்ரோகிராம்

வைட்டமின் பி6 - 0.367மி.கி.

| | | | |
|---|---|---|---|
| வைட்டமின் | சி | - | 8.7மி.கி. |
| வைட்டமின் | இ | - | 0.10மி.கி |
| வைட்டமின் | கே | - | 0.5 மைக்ரோகிராம் |

**மன அழுத்தம்**

கடுமையான மன அழுத்தத் தில் இருப்பவர்களுக்கு வாழைப்பழம் சாப்பிட்டதும் அதிலிருந்து நிவாரணம் கிடைப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. காரணம், அதிலுள்ள ட்ரிப்டோஃபன். இது ஒருவகையான புரதம். இதை உடல் செரட்டோனினாக மாற்றும். செரட்டோனின் படபடப்பைக் குறைத்து, மகிழ்ச்சியான உணர்வைக் கொடுக்கக்கூடியது.

**பி.எம்.எஸ்.**

மாதவிலக்குக்கு முன்னால் மனத்தளவிலும் உடலளவிலும் ஏற்படுகிற பிரச்னைகளை ப்ரீ மென்ஸ்டுரல் சிண்ட்ரோம் (பி.எம்.எஸ்.) என்கிறோம். அந்தப் பிரச்னைகளுக்கு மாத்திரைகள் எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக வாழைப்பழம் சரியான மாற்று மருந்து.

**ரத்த சோகை**

வாழைப் பழத்தில் இரும்புச்சத்து அதிகமுள்ளது. ஹீமோகுளோபின் அளவை அதிகரிக்கச் செய்து ரத்தசோகையை விரட்டக் கூடியது.

**ரத்த அழுத்தம்**

உப்புச்சத்து குறைவாகவும் பொட்டாசியம் அதிகமாகவும் உள்ளதால், இது ரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டில் வைக்கக்கூடியது. வாதத்தையும் வரவிடாமல் செய்யக்கூடியதாம்.

**மலச்சிக்கல்**

இதிலுள்ள நார்ச்சத்தானது செரிமானத்துக்கு உதவும் என்பது எல்லோரும் அறிந்ததே. மலமிளக்கும் மருந்துகளின் தேவையின்றி, மலச்சிக்கலைப் போக்கக்கூடியது.

**நெஞ்செரிச்சல்**

நெஞ்செரிச்சலால் அவதிப்படுவோர் அதற்கான மருந்துகளைத் தேடி ஓடாமல், உடனடியாக வாழைப்பழம் சாப்பிட்டால் தீர்வு கிடைக்கும்.

**கொசுக்கடி**

கொசுக்கடியின் அவதியிலிருந்து விடுபட, கனிந்த வாழைப்பழத்தைத் தடவினால் நல்ல பலன் கிடைக்கும்.

**மசக்கை**

கர்ப்ப கால மசக்கைக்கும் வாழை நல்ல மருந்து.

**அல்சர்**

வாழையின் மென்மையான, வழவழப்பான தன்மை காரணமாக, அது குடல் பிரச்னைகளுக்கும் மருந்தாவது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதிகமாக அமிலம் சுரப்பதைக் கட்டுப்படுத்தி, வயிற்றுப் பகுதிக்கு இதமளிக்கக்கூடியதும் கூட. இங்கிலாந்தில் 200 மாணவர்களுக்கு காலை, முன்பகல், மதியம் என மூன்று வேளைகளுக்கும் வாழைப்பழம் கொடுக்கப்பட்டதாம். அவர்கள் மற்றவர்களைவிட சிறப்பாக தேர்வுகள் எழுதியது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. வாழையில் உள்ள பொட்டாசியத்துக்கு, மூளையின் ஆற்றலைத் தூண்டி, நினைவாற்றலைப் பெருக்கும் சக்தி உள்ளதே காரணமாம். மது அருந்திய பிறகு தொடரும் ஹேங் ஓவர் மனநிலைக்கு வாழை சிறந்த உணவு என்கிறார்கள் மருத்துவர்கள். வாழைப்பழத்தில் பாலும் தேனும் சேர்த்து மில்க் ஷேக்காக குடிப்பது இந்தப் பிரச்னைக்கு நல்லது என்கிறார்கள்.

இவை தவிர, வாழையில் உள்ள அதிகளவு வைட்டமின் பி, நரம்பு மண்டல ஆரோக்கியத்துக்கு நல்லது. கர்ப்பிணிகளின் உடல் சூட்டை பேலன்ஸ் செய்து, குழந்தை ஆரோக்கியமாகப் பிறக்கச் செய்யவும் வாழை உதவுகிறது. வாழையில் உள்ள வைட்டமின் பி 6 மற்றும் பி12, மக்னீசியம், பொட்டாசியம் ஆகியவை, சிகரெட் பழக்கத்தைக் கைவிட நினைப்பவர்களுக்குப் பெரிதும் உதவுகிறது.

**யாருக்குக் கூடாது?**

கட்டுப்பாடற்ற நீரிழிவு இருப்பவர்கள் வாழைக்காய், வாழைப்பழத்தைத் தொடவே கூடாது. உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சி மூலம் சர்க்கரை அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்கள் அளவோடு எடுத்துக் கொள்வதில் ஆபத்தில்லை.

ஆப்பிளைவிடச் சிறந்தது!

ஆப்பிளைவிட 4 மடங்கு அதிக புரதம், 2 மடங்கு கார்போஹைட்ரேட், 3 மடங்கு அதிக பாஸ்பரஸ், 5 மடங்கு அதிகமான வைட்டமின் ஏ மற்றும் இரும்புச்சத்து, 2 மடங்கு அதிகமான வைட்டமின் மற்றும் தாதுச்சத்துகளைக் கொண்டது வாழைப்பழம்.

**வாழைக்காய் கபாப்**

**என்னென்ன தேவை?**

எண்ணெய் - 2 டேபிள்ஸ்பூன், வேகவைத்து மசித்த வாழைக்காய் - 3, ஓட்ஸ் - 1 டேபிள்ஸ்பூன், மிளகாய் தூள் - 1/2 டேபிள்ஸ்பூன். சோம்புத்தூள் - 1 டீஸ்பூன், வறுத்துப் பொடித்த சீரகத்தூள் - 1 டீஸ்பூன், சாட் மசாலா - 1 டீஸ்பூன், ஆம்சூர் பவுடர் - 1/2 டீஸ்பூன், பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய் - 1, கரம் மசாலா தூள் - 1/2 டேபிள்ஸ்பூன், கொத்தமல்லி இலை - 1/2 கப், உலர்ந்த திராட்சை - 10, வேர்க்கடலை (தேவைப்பட்டால்) - 10, அரிசி மாவு - 1 டேபிள்ஸ்பூன், கருப்பு உப்பு - தேவைக்கேற்ப.

**எப்படிச் செய்வது?**

வாழைக்காயை வேகவைத்து தோலுரித்துக் கொள்ளவும். இதை மசித்து ஒரு பாத்திரத்தில் போட்டு மேலே சொன்ன எல்லா பொருட்களையும் போட்டு எல்லாவற்றையும் நன்றாக பிசைந்து கொள்ளவும். தேவைப்பட்டால் சிறிது அரிசி மாவு சேர்த்து பிசையலாம். கையில் எண்ணெய் தடவி இதை தட்டையாக தட்டிக் கொள்ளவும். ஒரு கடாயில்

எண்ணெய் ஊற்றி இதை போட்டு பொன்னிறமாக பொரித்தெடுக்கவும். இரு பக்கமும் மொறுமொறுப்பாகும் வரை பொரிக்கவும். இதை கார சட்னி, இனிப்பு சட்னி, தயிர் பச்சடி ஆகியவற்றுடன் பரிமாறலாம். தக்காளி சாஸ் உடனும் பரிமாறலாம்.

**வாழைக்காய் புட்டிங்**

**என்னென்ன தேவை?**

வாழைக்காய் - 1, வெல்லம் - 1 கப், முதல் தேங்காய்ப் பால் - 1 கப், இரண்டாம் தேங்காய்ப் பால் - 3 கப், நெய் - 4 டேபிள்ஸ்பூன், ஏலக்காய் தூள் - 1/2 டீஸ்பூன், தேங்காய் துண்டுகள் - சிறிது.

**எப்படிச் செய்வது?**

அரை கப் தண்ணீரில் வெல்லத்தை போட்டு கரைய விட்டு அழுக்குகள் போக வடிகட்டவும். ஒரு கடாயில் 3 டேபிள்ஸ்பூன் நெய் ஊற்றி சூடானவுடன் வேகவைத்து மசித்த வாழைக்காயை அதில் சேர்த்து 5 நிமிடங்கள் பிரட்டவும். இத்துடன் வெல்லம், இரண்டாவது தேங்காய்ப் பாலை சேர்த்து நன்கு கெட்டியாகும் வரை கொதிக்க விடவும். கொதித்தவுடன் இறக்கி வைத்து முதல் தேங்காய்ப் பால் சேர்க்கவும். இது குளிர்ந்தவுடன் பாயசம் கீர் மாதிரி திக்காக இருக்கும். இத்துடன் ஏலக்காய் தூள் சேர்க்கவும். கடாயில் 1 டீஸ்பூன் நெய் சேர்த்து தேங்காய் துண்டுகளை பொன்னிறமாக வறுத்து பாயசத்தில் சேர்க்கவும். இதை சூடாகவோ, குளிர வைத்தோ பரிமாறலாம்.

**வாழைக்காய் அடை**

**என்னென்ன தேவை?**

வாழைக்காய் - 1, அரிசி - 2 கப், உளுந்து - 1/2 கப், துவரம் பருப்பு - 1/2 கப், கடலைப் பருப்பு - 1/4 கப், காஷ்மீரி மிளகாய் - 4, பச்சை மிளகாய் - 2, உப்பு - தேவைக்கு, பெருங்காயம், கறிவேப்பிலை - சிறிதளவு, எண்ணெய் - தேவைக்கு.

**எப்படிச் செய்வது?**

அரிசி, பருப்பு, காஷ்மீரி மிளகாய், பச்சை மிளகாய் ஆகியவற்றை கழுவி 3 மணி நேரம் ஊற விடவும். ஊறிய பிறகு பெருங்காயம், உப்பு சேர்த்து வழவழப்பாக அரைத்துக் கொள்ளவும். இத்துடன் கறிவேப்பிலை சேர்க்கவும். 4 மணி நேரம் புளிக்க வைக்கவும். அடைக்கு நாம் கொரகொரப்பாக அரைப்போம். ஆனால், இதற்கு வழவழப்பாக தோசை மாவு போல் அரைக்க வேண்டும்.

வாழைக்காயை தோலுரித்து சீவி அலம்பிக் கொள்ளவும். தவாவை சூடாக்கி சிறிது எண்ணெய் ஊற்றி ஒரு துணியில் துடைக்கவும். வாழைக்காய் துண்டுகளை இந்த மாவில் தோய்த்து தவாவில் வைக்கவும். சிறிது எண்ணெய் ஊற்றி அதை பிரட்டி எடுக்கவும். இரு பக்கமும் எண்ணெய் ஊற்றி பிரட்டி எடுக்கவும். தேங்காய் சட்னி, வெல்லம் அல்லது வெண்ணெயுடன் பரிமாறவும்.

**கண்நோய்களை விரட்டும் நெல்லிக்காய்**




தேவலோகத்தில் இந்திரன் அமுதத்தை உண்ணும் போது அதில் ஒரு துளி பூலோகத்தில் விழுந்ததாம். அதிலிருந்து முளைத்து உண்டானது தான் நெல்லிமரம் என்று கூறப்படுகிறது. இத்தனை உபயோகமுள்ள ஒரு

மரத்தை தெய்வீக மரம் என்று சொல்லலாம். நெல்லியில் கருநெல்லி, அருநெல்லி என இருவகைகள் உண்டு. தமிழகத்திலும், வட மாநிலங்களிலும் அதிகமாக வளர்கிறது. தமிழகத்தில் வளரும் நெல்லிக்காய் சிறியளவில் கொஞ்சம் துவர்ப்பும், புளிப்பும் அதிகம் கொண்டதாக இருக்கும். வட நாட்டில் வளரும் நெல்லி பெரிதாக இருக்கும். பல மருத்துவக் குணங்கள் இருப்பதாலேயே நெல்லியை அனைவரும் உயர்வாகப்புகழ்கிறார்கள். நெல்லிக்கனியை உண்டு தண்ணீரைக் குடித்தால் அது எப்பேர்பட்ட தண்ணீராக இருந்தாலும் இனிக்கும். இதன் காரணமாகவே கிராமங்களில் கிணற்றுத் தண்ணீர் ருசியாக இல்லாவிட்டால், நெல்லி மரக்கிளையை வெட்டி கிணற்றில் போட்டு விடுவார்கள்.

தண்ணீர் இனிப்பாக மாறிவிடும். பெரியளவில் உள்ள நெல்லிக்காய் ஊறுகாய் செய்யவும், சிறியதை ஆயுர்வேத மருந்துகள், லேகியம் முதலியவை செய்ய பயன்படுத்துகிறார்கள். தினம் ஒரு நெல்லிக்காயை உண்டால், அது தேகத்திற்கு புத்துணர்ச்சியைக் கொடுத்து நாம் இளமையாக இருக்க உதவும் டானிக்காக இருக்கும். தொற்றுநோய்கள் அண்டாது. இருதயம், சிறுநீரகம் பலப்படும். ஒரு ஸ்பூன் நெல்லி சாறையும், அரை ஸ்பூன் தேனையும் கலந்து தினமும் காலையில் சாப்பிட்டு வந்தால் கண் நோய் வராது. உடல் சதை பலப்படும். நெல்லிச்சாறுடன் பாகற்காய்சாறைச் சேர்த்துச் சாப்பிட்டால், கணையத்தைத் தூண்டி இன்சுலின் சுரப்பை அதிகப்படுத்தி சர்க்கரை வியாதியைத் தடுக்கும். ஒரு ஸ்பூன் நெல்லிக்காய் பொடி, ஒரு ஸ்பூன் நாவல் பழப்பொடி, ஒரு ஸ்பூன் பாவற்காய் தூள் சேர்த்து சாப்பிட்டு வந்தால் சர்க்கரை நோய் வரவே வராது. உலர்ந்த நெல்லிக்காயையும், சிறிது வெல்லத்தையும் சேர்த்து சாப்பிட்டால் முடக்கு வியாதி குணமாகிவிடும். நல்ல சுத்தமான தண்ணீரில் இரண்டு

நெல்லிக்காய்களைப் போட்டு ஊற வைத்து அந்தத் தண்ணீரை எடுத்து கண்களை அகல விரித்து கழுவவும். கண்ணுக்குச் சிறந்த மருந்து இது. கண் சிவந்து புண்ணாகுதல் முதலிய வியாதிகளை குணப்படுத்தும்.அழகு சாதனப் பொருள்கள் தயாரிப்பதிலும் நெல்லிக் காய்க்கு பிரதான இடம் உண்டு. நெல்லியின் உள்ளிருக்கும் கொட்டைகளை நன்கு பொடி செய்து அதை தேங்காய் எண்ணெயில் கலந்து, நன்றாக கொதிக்க வைத்து, பின் குளிர வைத்து தலைக்குத் தடவி வந்தாலும், தலை பளபளப்பாகவும் கருமையாகவும், அடர்த்தியாகவும் இருக்க உதவும். தரமான தலை சாயங்களில் நெல்லி விதையைத்தான் பயன்படுத்துகிறார்கள். முதுமையை தடுக்கும் குணம் நெல்லிக்கனிக்கு உண்டு என்பதை சித்தர்கள் முதல் பாமரர் வரை அறிவார்கள். ஆனால் நவீன ஆராய்ச்சி மூலம் இதை உண்மை என உரைத்திருக்கின்றனர். நெல்லிக்காயில் 8.75 மில்லி கிராம் வைட்டமின் சி உள்ளது. தாதுப்புக்களும், இரும்பு சத்தும் நிறைந்துக் காணப்படுகிறது.

ஆரஞ்சு பழத்தை விட நெல்லிக்கனியில் 20 மடங்கு வைட்டமின் சி சத்து நிறைந்துள்ளது. ஆப்பிளை விட 3 மடங்கு புரதச்சத்து நெல்லியில் உள்ளது. அஸ்கார்பிக் அமிலம் என்னும் உயிர்ச்சத்து 160 மடங்கு நெல்லிக்கனியில் உள்ளது. நெல்லிவற்றல், பச்சைபயறு வகைக்கு 20 கிராம் எடுத்து 1 லிட்டர் நீர்விட்டு 200 மி.லி.ராக காய்ச்சி வடித்து, 100 மி.லி என காலையும் மாலையும் அருந்தி வந்தால் தலைச்சுற்றல் கிறுகிறுப்புடன் கூடிய இரத்தக்கொதிப்பு நீங்கும்.

**கரூர் ஜவுளி உற்பத்தியும், ஏற்றுமதியும்**




சர்வதேச ஜவுளி ஏற்றுமதி வரை படத்தில் திருப்பூருக்கு அடுத்தபடியாக வீட்டு உபயோக கைத்தறி துணிகள் ஏற்றுமதியில் கரூர் உள்ளது. நெசவு தொழில் வளர்ச்சியடைந்து கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள், கைத்தறி ஏற்றுமதி ஜவுளி உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் என செயல்படுகின்றனர். 1975ம் ஆண்டில் கரூரில் கைத்தறி ஜவுளி உற்பத்தி மற்றும் ஏற்றுமதியாளர்கள் 15 பேர்தான் இருந்தனர், இன்றைக்கு 150க்கும் மேற்பட்ட ஏற்றுமதியாளர்கள் உள்ளனர். ஏற்றுமதி துணி வகைகளில் சமையலறை, படுக்கையறை, குளியலறையில் பயன்படுத்துவதற்கும், பர்னிச்சர்களுக்கு பயன்படுத்தும் மதிப்புக்கூட்டப்பட்ட துணி ரகங்கள் முன்னணியாக இருக்கின்றன. படுக்கை விரிப்புகள், டவல்கள், தரைவிரிப்பு, டீ டவல், நாப்கின், சமையலறை துண்டு, பிளேட் மேட், டீமேட், திரைசீலைகள், தலையணை உறை போன்றவை ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான், கனடா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், தென்கொரியா, தென்ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகின்றன.

**நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி**

திருச்சி, : நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி வகுப்பு திருச்சி அடுத்த கொட்டப்பட்டில் இயங்கி வரும் கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நாளை மறுதினம் (11ம் தேதி) நடைபெறுகிறது. இதுகுறித்து ஆராய்ச்சி மையத் தலைவரான பேராசிரியர் ரிச்சர்டு ஜெகதீசன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் கூறியிருப்பதாவது: இப் பயிற்சியில் நாட்டுக்கோழி இனங்கள், தரம் உயர்த்தப்பட்ட நாட்டுக்கோழி இனங்கள், நாட்டுக்கோழி வளர்ப்பு, தீவன மேலாண்மை, சிறிய குஞ்சு பொரிப்பானில் முட்டைகளைப் பொரித்தல், குஞ்சுகளை பறவைக்கூண்டில் வளர்த்தல், முறையான பராமரிப்பு, நோய் தடுப்பு முறைகள் குறித்து சிறப்பு பயிற்சி அளிக்கப்படும். இதில் சேர விரும்புவோர் நாளை மறுதினம் (11ம் தேதி) காலை 10 மணிக்குள் வரவேண்டும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். மேலும் விபரங்களை நேரிலோ அல்லது 0431 2331715 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என்றார்.

சிறுவிவசாயிகள் நலசங்க ஆலோசனை கூட்டம்

கோத்தகிரி, : மலை மாவட்ட சிறு விவசாயிகள் நலச்சங்க தலைவர் போஜன் கூறியிருப்பதாவது: கோத்தகிரியில் மலை மாவட்ட சிறு விவசாயிகள் நலச்சங்க ஆலோசனை கூட்டம் இன்று (செவ்வாய்க்கிழமை) நடக்கிறது. கூட்டத்துக்கு விவசாயிகள் சங்க தலைவர் தும்பூர் போஜன் தலைமை தாங்குகிறார். இந்த கூட்டத்தில் பச்சை தேயிலையின் விலை, குறைவதற்கான காரணம் என்ன? அதற்கான தீர்வு என்ன? என்பது குறித்து விவாதிக்கப்படுகிறது. மேலும் தேயிலை விவசாயிகள் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் வாங்குவதற்கு 50 சதவீத மானியம் வழங்க கோரிக்கை விடுப்பது; விவசாயியின் குழந்தைகளுக்கு தேயிலை வாரியத்தின் மூலம் வழங்கப்பட்டு வந்த, கல்விக்கான மானியத்தை மீண்டும் தர

வலியுறுத்துவது; விவசாயிகள் தேசிய வங்கியின் மூலம் பெற்ற கடன்களை முழுவதும் ரத்து செய்ய வேண்டுகோள் விடுப்பது உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்படுகிறது. இந்த கூட்டத்தில் கோத்தகிரி பகுதியை சேர்ந்த அனைத்து விவசாயிகள் சங்க நிர்வாகிகளும், சிறு, குறு விவசாயிகளும் கலந்து கொள்ள வேண்டும்.இவ்வாறு போஜன் கூறியுள்ளார்.

**ரூ.98 கோடி மதிப்பில் 11 தடுப்பணைகள், உயர்மட்ட பாலங்கள் ஜெயலலிதா திறந்து வைத்தார்**



சென்னை,

தமிழகத்தில் ரூ.98 கோடி மதிப்பிலான 11 தடுப்பணைகள், உயர்மட்ட பாலங்கள் உள்ளிட்டவைகளை முதல்–அமைச்சர் ஜெயலலிதா வீடியோ கான்பரன்சிங் மூலம் நேற்று திறந்துவைத்தார்.

இதுகுறித்து, தமிழக அரசு நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:–

பாசன மேம்பாட்டு திட்டங்கள்

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் விவசாயத்தை மேம்படுத்தும் வகையிலும், மக்களின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், கிடைக்கப்பெறும் நீரை வீணாக்காமல் நீர்நிலைகளில் தேக்கி வைக்கும் பொருட்டும், பல்வேறு பாசன மேம்பாட்டுத் திட்டங்களை முதல்–அமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திருப்பூர் மாவட்டம் – தாராபுரம், அமராவதியாற்றின் குறுக்கே 7 கோடியே 60 லட்சத்து 37 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணையினை காணொலிக் காட்சி மூலமாக முதல்–அமைச்சர் ஜெயலலிதா இன்று (நேற்று) திறந்துவைத்தார்.

மேலும், அரியலூர் மாவட்டம், அம்பலவார் கட்டளை சுண்டக்குடி சாலை, மருதையாற்றின் குறுக்கே 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலம்; கடலூர் மாவட்டம் – கூத்தப்பாக்கம் கிராமம் அருகில் கெடிலம் ஆற்றின் குறுக்கே 16 கோடியே 24 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

தடுப்பணைகள்

திண்டுக்கல் மாவட்டம் – ஒட்டன்சத்திரம் வட்டம், ஜவ்வாதுபட்டி புதூர் கிராமம் அருகில் நங்காஞ்சியாற்றின் குறுக்கே 1 கோடியே 10 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை மற்றும் வேடசந்தூர் வட்டம், திருக்கூர்ணம் கிராமம் அருகில் குடகனாற்றின் குறுக்கே 4 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

கரூர் மாவட்டம் – அரவக்குறிச்சி வட்டம், ராஜபுரம் கிராமம், அமராவதி ஆற்றின் குறுக்கே 2 கோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

கட்டப்பட்டுள்ள தடுப்பணை; ராமநாதபுரம் மாவட்டம் – பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் நீரொழுங்கியின் கீழ் வைகை ஆற்றின் குறுக்கே குன்னப்பனேந்தல் கிராமம் அருகில் 19 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை மற்றும் வைகை ஆற்றின் குறுக்கே போகலூர் ஒன்றியம், வலசை கிராமம் அருகில் கீழ்நாட்டார் கால்வாய் மற்றும் 16 கண்மாய்கள் பாசன வசதி பெறும் பொருட்டு 19 கோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள படுகை அணை;

ரூ.98 கோடி மதிப்பில்...

சிவகங்கை மாவட்டம் – திருப்பத்தூர் வட்டம், முறையூர் கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே 1 கோடியே 45 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை; தேனி மாவட்டம் – தேனியாறு உபவடிநிலம், கொட்டகுடி கிராமம் கொம்புதூக்கி அய்யனார் கோவில் அருகில் கொட்டகுடி ஆற்றின் குறுக்கே 70 லட்சத்து 93 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை; அணைக்கரைப்பட்டி கிராமம் சன்னாசிபுரம் சிற்றூர் அருகில் கொட்டகுடி ஆற்றின் குறுக்கே 1 கோடியே 1 லட்சத்து 37 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை மற்றும் மேல் வைகை உபவடிநிலம், அம்மச்சியாபுரம் கிராமம் அருகே வைகை ஆற்றின் குறுக்கே 2 கோடியே 29 லட்சத்து 23 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

திருப்பூர் மாவட்டம் – சாலைத்துரை கிராமத்தில் 4 கோடியே 18 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை; வேலூர் மாவட்டம் – குடியாத்தம் வட்டம், சீவூர் கிராமத்தில், கவுண்டன்யா நதியின் குறுக்கே 3 கோடியே 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கீழ்மட்ட நிலத்தடி தடுப்புச்சுவர்; தேனி மாவட்டம் – மேல் வைகை உபவடிநிலத்தில், துரைசாமிபுரம் கிராமத்தில் உள்ள துரைசாமிபுரம் அணையில் இருந்து சக்கிலிச்சிகுளம் மற்றும்

நல்லிடைச்சேரி கண்மாய்களுக்கு நீர் வழங்கும் பொருட்டு 2 கோடியே 97 லட்சத்து 9 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ள வழங்கு கால்வாய்கள்; என மொத்தம் 97 கோடியே 74 லட்சத்து 14 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 11 தடுப்பணைகள், உயர்மட்ட பாலம், ஒரு படுகை அணை, ஒரு கீழ்மட்ட நிலத்தடி தடுப்புச்சுவர், வழங்கு கால்வாய்கள் ஆகிய கட்டமைப்புகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக முதல்–அமைச்சர் ஜெயலலிதா இன்று (நேற்று) திறந்துவைத்தார்.

<u>நீர்வள ஆதாரத் துறை</u>

ஈரோடு மாவட்டம் – அந்தியூர் மற்றும் சத்தியமங்கலத்தில் கட்டப்பட்டுள்ள நீர்வள ஆதாரத் துறையின் பிரிவு அலுவலக கட்டிடங்கள்; கன்னியாகுமரி மாவட்டம் – நாகர்கோவிலில் கட்டப்பட்டுள்ள நீர்வள ஆதாரத் துறையின் பிரிவு அலுவலகங்களுடன் கூடிய திட்டமிடுதல் மற்றும் வடிவமைப்பு உபகோட்ட கட்டிடம்; திருப்பூர் மாவட்டம் – உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி நகரில் கட்டப்பட்டுள்ள நீர்வள ஆதாரத் துறையின் பிரிவு அலுவலர் குடியிருப்பு கட்டிடம் மற்றும் பிரிவு அலுவலக கட்டிடம்;

பொதுப்பணித்துறையின் சார்பில் ஈரோடு நகரத்தில் கட்டப்பட்டுள்ள அலுவலர் குடியிருப்பு; நீலகிரி மாவட்டம் – உதகமண்டலத்தில் கட்டப்பட்டுள்ள நகரப்பிரிவு மற்றும் ராஜ்பவன் பிரிவு அலுவலக கட்டிடம்; விருதுநகர் மாவட்டம் – சிவகாசியில் கட்டப்பட்டுள்ள ஆய்வு மாளிகை கட்டிடம் என 1 கோடியே 14 லட்சத்து 49 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அலுவலக கட்டிடங்கள், ஆய்வு மாளிகை மற்றும் குடியிருப்புகள் ஆகியவற்றை முதல்–அமைச்சர் ஜெயலலிதா இன்று (நேற்று) திறந்துவைத்தார். முதல்–அமைச்சர் ஜெயலலிதா இன்று (நேற்று) பொதுப்பணித்துறையின் சார்பில் திறந்து வைத்த திட்டங்களின் மொத்த மதிப்பு 98 கோடியே 88 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய் ஆகும்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் ஓ.பன்னீர்செல்வம், எம்.சி.சம்பத், டாக்டர் எஸ்.சுந்தரராஜ், தலைமைச் செயலாளர் கு.ஞானதேசிகன், தமிழ்நாடு அரசு ஆலோசகர் ஷீலா பாலகிருஷ்ணன், பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் நா.ச.பழனியப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**கடலூர் துறைமுகத்திற்கு 30 டன் மத்தி மீன்கள் வந்தது வியாபாரிகள் போட்டி போட்டு வாங்கி சென்றனர்**



கடலூர்முதுநகர்,

கடலூர் துறைமுகத்திற்கு நேற்று 30 டன் அளவில் மத்தி மீன்கள் வரத்து இருந்தது. இதை வியாபாரிகள் போட்டி போட்டு வாங்கி சென்றார்கள்.

<u>கடலூர் துறைமுகம்</u>

கடலூர் துறைமுகத்தில் இருந்து நாள்தோறும் சிங்காரத்தோப்பு, தேவனாம்பட்டினம், அக்கரைக்கோரி, சோனாங்குப்பம், சித்திரப்பேட்டை, ராசாப்பேட்டை, தாழங்குடா உள்ளிட்ட மீனவ

கிராமங்களை சேர்ந்த ஆயிரத்திற்கும் அதிகமான மீனவர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட விசை மற்றும் பைபர் படகுகளில் ஆழ்கடலுக்கு சென்று மீன்பிடித்து வருவது வழக்கம்.

இந்த நிலையில் நேற்றும் வழக்கம் போல் மீனவர்கள் ஆழ்கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். அவ்வாறு பைபர் படகுகளில் சென்ற மீனவர்கள் வலையில் அதிகளவில் மத்தி மீன்கள் சிக்கியது. இதை கடலூர் துறைமுகத்தில் மீன்பிடி தளத்திற்கு கொண்டு வந்தனர். அங்கு இருந்த உள்ளூர் மற்றும் வெளி மாநில வியாபாரிகள் போட்டி போட்டு மத்தி மீன்களை வாங்கினர். ஐஸ் பெட்டிகளில் மீன்களை அடைத்து கேரளா மற்றும் கர்நாடகத்திற்கு லாரிகள் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டது.

<u>30 டன் மத்தி மீன்கள்</u>

நேற்று ஒருநாள் மட்டும் துறைமுகத்திற்கு மத்தி மீன்களின் வரத்து 30 டன் அளவிற்கு மேல் இருந்தது என்றும், அதில் 40 கிலோ எடை கொண்ட ஒரு பெட்டி மத்தி மீன்கள் விலை ரூ. ஆயிரத்து 500–க்கு விற்பனையானது என்றும் மீனவர் ஒருவர் தெரிவித்தார்.

மத்தி மீன்களின் வரத்து அதிகமானதாலும், நல்ல விலைக்கு விற்பனையானதாலும் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். நேற்று ஒரே நாளில் 30 டன்னுக்கு மேல் மத்தி மீன்கள் வரத்து இருந்ததால் துறைமுக பகுதி பரபரப்புடன் காணப்பட்டது.